# January 4, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. விமானத்தில் இருந்து செலுத்தக்கூடிய பாகிஸ்தானின் முதல் தைமூர் ஏவுகனை ரகம் வெற்றிகரமாக சோதித்துப் பார்க்கப்பட்டது.

(i) விமானத்தில் இருந்து செலுத்தக்கூடிய தைமூர் ஏவுகணையை பாகிஸ்தான் விமானப்படை வெற்றிகரமாக சோதித்துப் பார்த்தது. 600 கிலோமீட்டர் தொலைவில் உள்ள எதிரிகளின் நிலம் மற்றும் கடல் இலக்குகளை இந்த ஏவுகணை உயர் துல்லியத்துடன் தாக்கவல்லது. இது அணுகுண்டு அல்லாத பாரம்பரிய வெடிகுண்டுகளை ஏந்திச் செல்லும்.

(ii) அதிநவீன வழிகாட்டுதல் அமைப்புடன் செயல்படும் இந்த ஏவுகணை மிகக் குறைந்த உயரத்தில் பறக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனால் எதிரிகளின் வான்பாதுகாப்பு அமைப்புகளைத் திறம் பட தவிர்க்க முடியும். இதன் துல்லியமாகத் தாக்கும் திறன் நாட்டின் ஒட்டுமொத்த பாதுகாப்பு நிலையை மேம்படுத்துகிறது என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. மியான்மரில் நடைபெற்ற பொதுத் தேர்தலின் முதல் கட்ட வாக்கு எண்ணிக்கையில் ராணுவ ஆதரவு பெற்ற யூனியன் சாலிடாரிட்டி அண்ட்டெவலப்மெண்ட் பார்ட்டி (யுஎஸ்டிபி) கட்சி பெரும்பான்மை இடங்களில் முன்னிலை வகிக்கிறது.

(i) ராணுவ ஆட்சியாளர்மின் ஆங்கி லியாங்குக்கு நெருக்கமான யுஎஸ்டிபி கட்சியின் தலைவர் கின் யீ, தலைநகர் நேபிடாவில் உள்ள தனது தொகுதியில் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ii) இதற்கு முன்னர் கடந்த 2020- ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற ஆங் சான் சூகி தலைமையிலான தேசிய ஜனநாயகக் சட்சி (என்எல்டி) பிரதிநிதிகள் சபையில் 258 இடங்களிலும் குடிமக்கள் சபையில் 138 இடங்களையும் கைப்பற்றி ஆட்சியமைத்தது. யுஎஸ்டிபி கட்சிக்கு தலா 26 மற்றும் 7 இடங்கள் மட்டுமே கிடைத்தன.

(iii) இருந்தாலும், தேர்தலில் முறைகேடுகள் நடைபெற்றதாகக் கூறி ஆங் சான் சூகியின் அரசை ராணுவம் கடந்த 2021-ஆம் ஆண்டு கவிழ்த்துவிட்டு ஆட்சியைக் கைப்பற்றியது. அவரின் என்எல்டி கட்சியும், 39 மற்ற கட்சிகளும் 2023-ஆம் ஆண்டு கலைக்கப்பட்டன. இந்தச் சூழலில், 2021 ராணுவ ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பிறகு நடைபெறும் முதல் தேர்தலில் ராணுவ ஆதரவு யுஎஸ்டிபி முன்னிலை வகிக்கிறது.

(iv) தற்போது நடைபெற்றுவரும் ராணுவ ஆட்சியை மறைமுகமாக நீட்டிப்பதற்காகவே இந்தத் தேர்தல் நியாயமற்று நடத்தப்படுவதாக எதிர்க்கட்சிகளும், மனித உரிமை அமைப்புகளும் குற்றஞ்சாட்டும் சூழலில், அதை உறுதிப்படுத்தும் வகையில் இந்த அறிவிப்பு உள்ள தாகக் கூறப்படுகிறது.

3.மின்சார வாகனங்களில் பயன்படுத்தப்படும் பேட்டரிகளைக் கண்காணிப்பதற்கும், அவற்றை முறையாக மறுசுழற்சி செய்வதற்கும் ஏதுவாக, அவற்றுக்கு 'ஆதார்' போன்ற பிரத்யேக அடையாள எண்ணை (Battery Pack Aadhaar Number (BPAN)) உருவாக்க மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் திட்டமிட்டுள்ளது.

(i) இதன்படி, பேட்டரி தயாரிப்பாளர்கள் அல்லது இறக்குமதியாளர்கள், ஒவ்வொரு பேட்டரிக்கும் 21 இலக்கங்கள் கொண்ட பிரத்யேக அடையாள எண்ணை ஒதுக்குவது கட்டாயமாக்கப்படும். இந்த எண், பேட்டரியின் மீது எளிதில் சிதையாத வண்ணம் தெளிவான இடத்தில் பதிக்கப்பட வேண்டும்.

(ii) இந்த எண் மூலம், ஒரு பேட்டரி தயாரிக்க பயன்படுத்தப்பட்ட மூலப் பொருள்கள் தொடங்கி, அதன் பயன்பாடு, மறுசுழற்சி அல்லது அதன் இறுதிக்காலம் வரையிலான அனைத்து விவரங்களையும் துல்லியமாகக் கண்காணிக்க முடியும். பேட்டரி மறுசுழற்சி செய்யப்பட்டாலோ அல்லது அதன் வடிவம் மாற்றப்பட்டாலோ, அதற்கு புதிய அடையாள எண் வழங்கப்படும்.

(iii) இந்தியாவில் 'லித்தியம்-அயன்' பேட்டரிகளின் தேவையில் 80 முதல் 90 சதவீதம் மின்சார வாகன துறையிலேயே உள்ளது. எனவே, முதல் கட்டமாக மின்சார வாகன பேட்டரிகளுக்கு இந்த அடையாள எண் திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்பட உள்ளது. குறிப்பாக, 2 கிலோவாட் ஹவர் திறனுக்கும் அதிகமான பேட்டரிகளுக்கு இத்திட்டம்பொருந்தும்.

(iv) இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து ஆலோசிக்க ஒரு 'தர நிலைக் குழு' (ஏஜஎஸ்சி) அமைக்கப்பட உள்ளது. இதில் பேட்டரி தயாரிப்பாளர்கள், வாகன உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் மறுசுழற்சி வல்லுநர்கள் இடம்பெறுவர். இக்குழுவின் தொழில்நுட்பப் பரிசோதனைகளுக்குப் பிறகே இத்திட்டம் நாடு முழுவதும் முறைப்படி நடைமுறைக்கு வரும்.

4. ராணி வேலு நாச்சியாரின் பிறந்த நாளையொட்டி அவருக்கு குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன், பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் புகழாரம் சூட்டியுள்ளனர்.

(i) 1730-ஆம் ஆண்டு பிறந்த ராணி வேலு நாச்சியார், கிழக்கிந்தியகம் பெனிக்கு எதிராகப் போரிட்டுதனது சிவகங்கை ராஜ்ஜியத்தை மீண்டும் வென்ற முதல் இந்தியராணி ஆவார்.

5. புது தில்லியில் உள்ள ராய்பித் தோரா கலாசார வளாகத்தில், புத்தரின் புனித நினைவுச் சின்னங்கள் மற்றும் தொன்மையான பொருள்களின் சர்வதேச கண்காட்சியை பிரதமர் மோடி தொடங்கிவைத்தார். 'ஒளியும் தாமரையும்: விழித்தெழுந்தவரின் நினைவுச் சின்னங்கள்' என்ற தலைப்பிலான இக்கண்காட்சியில், நேபாள எல்லை யையொட்டிய உத்தர பிரதேச பகுதியான பிப்ரவாவில் (பண்டைய கபிலவஸ்து நகரமாக கருதப்படும் இடம்) கடந்த 1898-இல் கண்டறியப்பட்ட புத்தரின் புனித நினைவுச் சின்னங்கள் முக்கியமாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

6. நாட்டிலேயே 2025-ஆம் ஆண்டில் டெங்கு காய்ச்சல் பாதிப்பில் தமிழகம் முதலிடம் பிடித்துள்ளது. அதன்படி, தமிழகத்தில் டெங்குவால் 20,866 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மத்திய சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

(i) தமிழகத்தில் 2025-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்தே பல்வேறு இடங்களில் அவ்வப்போது மழை பெய்ததால் சாலைகள், தெருக்கள் தேங்கும் மழைநீரில் டெங்குவை பரப்பும்'ஏடிஸ் எஜிப்டை' வகை கொசுக்களின் பெருக்கம் அதிகரித்தது. இதனால், ஆண்டின் தொடக்கத்தில் இருந்தே டெங்கு காய்ச்சல் பரவத்

தொடங்கியது. வடகிழக்கு பருவமழை தொடங்கியதைத் தொடர்ந்து, கொசுக்களின் பெருக்கம் மேலும் அதிகரித்ததால் அரசு, தனியார் மருத்துவமனைகளில் டெங்குவால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை பலமடங்கு அதிகரித்தது.

(ii) தமிழக சுகாதாரத் துறை டெங்கு பரவலைக் கட்டுப்படுத்த பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தாலும், குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை டெங்குவால் பாதிக்கப்பட்டு வருவது தொடர்கிறது.

(iii) ஜனவரிக்கு பிறகே தமிழகத்தில் டெங்கு பாதிப்பு படிப்படியாகக் குறையத் தொடங்கும் என்று சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

(iv) இந்த நிலையில், நாடு முழுவதும் 2025-ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் முதல் நவம்பர் மாதம் வரை டெங்கு காய்ச்சல் பாதிப்பு குறித்த புள்ளிவிவரத்தை மத்திய சுகாதாரத் துறை வெளியிட்டுள்ளது. அதில், நாடு முழுவதும் டெங்குவால் 1,13,450 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 95 பேர் உயிரிழந்துள்ளனர்.

(v) நாட்டிலேயே அதிகபட்சமாக தமிழகத்தில் 20,866 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அடுத்ததாக மகாராஷ்டிரத்தில் 13,333 பேர், கேரளத்தில் 10,239 பேர், உத்தர பிரதேசத்தில் 8,926 பேர், தெலங்கானாவில் 8,139 பேர், கர்நாடகத்தில் 6,756 பேர், மணிப்பூரில் 5,457 பேர் டெங்குவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(v) அதேபோல், நாட்டிலேயே அதிகபட்சமாக கேரளத்தில் டெங்குவின் தீவிரத்தால் 49 பேர் உயிரிழந்துள்ளனர். அடுத்ததாக மகாராஷ்டிரத்தில் 13 பேரும், தமிழகத்தில் 12 பேரும் இறந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

7.தென் அமெரிக்க நாடான வெனிசுலா மீது அமெரிக்கா நடத்திய வான்வழித் தாக்குதலுக்கும், அந்நாட்டு அதிபர் நிக்கோலஸ் மடுரோ சிறைபிடிக்கப்பட்டதற்கும் இந்திய இடதுசாரி கட்சிகள் தங்களின் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.